தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-6-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆடிப்பட்டசோளத்தின் விலைநிலையாக இருக்கும்

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் மானவாரி பயிர்களில் முக்கிய தானியமாக சோளம் பயிரிடப்பட்டு வருகிறது. இது தீவனம், தீவனப்பயிர் மற்றும் தானியமாக பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில், 2013-14ல் சோளம் 5.82 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 5.54 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. மகாராஷ்டிரா, கர்நாடகா, இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை முக்கிய சோளம் பயிரிடும் மாநிலங்களாகும்.

தமிழ்நாட்டில் சோளம், 2012-13ல் 2.1 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 1.75இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. நாமக்கல் (26%), திண்டுக்கல் (11%), கோயமுத்தூர் (10%), திருச்சிராப்பள்ளி (10%), சேலம் (9%), விருதுநகர் (5%) மற்றும் தருமபுரி (5%) ஆகிய மாவட்டங்கள் மொத்த சோள உற்பத்தியில் 76 சதவீதம் பங்களிக்கின்றன. திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் பாரம்பரிய விதை வகைகளான மஞ்சள் சோளம், உயர்தர தீவனப்பயிர் விளைச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறது. வெள்ளைச்சோளம் தீவனத்திற்காகவும் மற்றும் உணவு தானியத்திற்காகவும் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் சோளம், ஆடிப்பட்டம் (ஜூலை–செப்டம்பர்), புரட்டாசி பட்டம் (அக்டோபர் - டிசம்பர்) மற்றும் கோடை காலங்களில் பயிரிடப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 12 ஆண்டுகளாக திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு

மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

நல்ல தரமான வெள்ளை சோள இரகத்தின் தற்போதைய விலை ரூ.22 முதல் ரூ.24வரை திருப்பூர் சந்தையில் விற்கப்படுகிறது. பொருளியல் அளவை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் ஆடிப்பட்ட பருவசோளம் அறுவடையின் போது (செப்டம்பர் - அக்டோபர் மாதத்தில்) கிலோவிற்கு ரூ.21-23வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கண்ட விலை தகவல் அடிப்படையில் ஆடிப்பட்ட சோள விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு,தொடர்பு கொள்ளவும்:</u>**

உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

**<u>தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறுதானியங்கள் துறை,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசிஎண்: 0422-2450507

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்